1995 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 277, திருமதி என். கனகவல்லி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

277—

இருக்கன்குடி மாரியம்மன் கோயில் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

***19774**—திருமதி என். கனகவல்லி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில் உள்ள ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது நிலவி வரும் நிதி நெருக்கடி காரணமாக இடுக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில் உள்ள ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம், சாத்தூர் வட்டத்தில் அமைந்த இடுக்கன்குடி அருள்மிகு மாரியம்மன் கோவில் தென் மாவட்டங்களில் பிரசித்திப்பெற்ற கோவில்களில் ஒன்று. அந்த கோவிலுக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் செல்கின்றார்கள். ஆனால் கோவிலுக்கு செல்லும் வழியில் ஆறு ஒன்று குறுக்கே இருப்பதால் மழைக் காலங்களில் பக்தர்கள் அருள்மிகு மாரி அம்மன் கோவிலுக்குச் சென்று தரிசிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட காலங்களில் பக்தர்கள் அருள்மிகு மாரி அம்மனை நினைத்து ஆற்றிற்கு முன்பே பொங்கலிட்டு, ஆடுவெட்டி தரிசனம் செய்கின்ற அவல நிலை ஏற்படுவதால் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் அமைந்த இந்த நல்லாட்சியில் மிகவும் பாழடைந்த கோவில்களில் எல்லாம் ஒருகால பூஜைக்கு ஏற்பாடு செய்து பக்தர்களின் மனங்குளிர பாலை வார்த்தார்கள். அப்படிப்பட்ட நமது தலைவி அவர்களின் ஆட்சியில் மீண்டும் ஒரு முறை பாலம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருக்கிற வினா சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இடுக்கன்குடி பஞ்சாயத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சாலையில் பாலம் அமைப்பதற்காகவும் அணுகுசாலை அமைப்பதற்காகவும் தற்போதைய விலை விகிதப்படி சுமார் ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் அரசுக்குத் தேவைப்படுகிறது. இவ்வளவு அதிக நிதி ஒதுக்கி ஊராட்சி ஒன்றியத்தின் நிதியிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ அல்லது அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தோ இந்த பாலத்தை தற்போது எடுக்கக்கூடிய நிலை இல்லை. மேலும் இப்படிப்பட்ட பெரிய பாலங்கள் எல்லாம் அந்த கட்டுமானப் பணிகளை பொதுப்பணித் துறை வாயிலாகத்தான் இன்றைக்கு செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் பொதுப்பணித் துறையை அணுகி இதற்குண்டான செயல்குறிப்பை வழங்கலாம். அரசு அதற்குப் பிறகு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதுமே பெரிய பாலங்கள் சாலைகள் என்றால் பொதுப்பணித் துறைக்குத்தான் வினாக்கள் அனுப்புகிறோம். அதே அடிப்படையிலே தான் நான் பொதுப்பணித்து துறைக்கு அனுப்பியிருந்தேன். தற்போது அந்த வினா உள்ளாட்சித்துறையின் கீழ் வந்துள்ளது. எனவே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் துறையின்கீழ் எடுத்துச் செய்வதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அர்ச்சனா நதி குறுக்கே கட்டப்படவேண்டிய, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை சம்பந்தப்பட்ட பாலம் பொதுப்பணித் துறையின் வாயிலாகத்தான் எடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. காரணம், ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதியிலிருந்து இந்தப் பாலத்தை எடுத்துச் செய்யக்கூடிய நிதிநிலை இல்லையென்று ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். அந்த அடிப்படையில், இந்தக் கருத்துருவை பொதுப் பணித் துறைக்கு அனுப்பி வைத்து ஆய்வுகளை மேற்கொள்ள இந்தத் துறை பணிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பாலம் அமைந்திருக்கிற சாலை உள்ளாட்சித் துறைக்கு உட்பட்ட சாலை என்கிற காரணத்தாலே உங்களுக்கு அந்த வினா அனுப்பப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கிற பாலமாக இருந்தாலும், சாலைகளாக இருந்தாலும் இன்றைக்கு இருக்கிற நிதிநிலையின் காரணமாக, இங்கே இருக்கிற பொதுப்பணித் துறையின் கீழே இருக்கிற ஆர்.ஆர்.டிவிஷன் என்று சொல்லுகிற அந்த டிவிஷனிலே அந்தப் பணிகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே, இந்தத் துறை, இது சம்பந்தமாக பொதுப் பணித் துறைக்கு கருத்துரு அனுப்பி ஆய்வுகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 278, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

278—

அம்பாசமுத்திரம் பேரூராட்சி பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்தல்

***21479**—திரு. ஆர். முருகையா பாண்டியன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் பேரூராட்சி, பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்து புதுப்பேருந்து நிலையம் கட்டும் தட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு.டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் வளர்ச்சி அடைந்து வரக்கூடிய ஒரு நகரம் ஆகும். இங்கே தேசியமயமாக்கப்பட்ட அனைத்து வங்கிகளும் உள்ளன. தாலுகா அலுவலகம் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. கல்லூரிகள் 3 உள்ளன. பல மேல்நிலைப்பள்ளிகள், டி.எஸ்.பி. ஆபீஸ் மற்றும் தாலுகா